**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,**
**இராமேஸ்வரம்.**
**முன்னிலை:திரு.S.இளையராஜா, M.L.,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்**

**2023–ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 21–ம் நாள் வியாழன்கிழமை**

**இ.ம.எண்.01/2023**
**இன்**
**<u>அ.வ.எண்.5/2020</u>**

மோசஸ் ......மனுதாரர்/வாதி

/எதிர்/

கிராசியாஸ் மற்றும் 9 நபர்கள் ........எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு இந்நீதிமன்றத்தில் 07.09.2023–ம் தேதி இறுதி விசாரணைக்காக வந்த போது மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.R.டோம்னிக் ரவி அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.A.அருள்ஜெபதுரை அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களையும் கேட்கப்பட்டும், ஆவணங்கள் பரிசீலனை செய்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**<u>உத்தரவு</u>**

மனுதாரர் இந்த மனுவை சிபிசி பிரிவு 151 ன் கீழ் வாதி தரப்பு சாட்சியத்தை மீண்டும் ரீ–ஓபன்(Reopen) செய்து உத்தரவிடுமாறு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **<u>மனுவின் சுருக்கம்:</u>**

மனுதாரர் தாக்கல் செய்த வழக்கில் மனுதாரரை வாதி தரப்பு 1வது சாட்சியாக விசாரணை செய்து முடிவடைந்து உள்ளது. மனுதாரர் தரப்பில் கூடுதல் சாட்சி விசாரணைக்காக கடந்த 06.04.2023 ஆம் தேதியிலிருந்து 01.06.2023–ஆம் தேதி வரை வாய்தா ஏற்பட்டிருந்தது. மனுதாரர் தரப்பு சாட்சியான சிங்கராயன் என்பவருக்கு கடந்த சில மாதங்களாக உடல்நிலை சரியில்லாமல் இருந்ததால், அவரரை மனுதாரர்

தரப்பில் சாட்சியாக ஏற்றமுடியாமல் போய்விட்டது. அதன் காரணமாக 01.06.2023ம் தேதியில் நீதிமன்றம் Plaintiff Side witness Closed என்று உத்தரவு பிறப்பித்துள்ளது. ஷை தவறு வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல.

மனுதாரர் வழக்கை செய்வதற்கு மனுதாரர் தரப்பில் கூடுதல் சாட்சிகளை விசாரிப்பது அவசியமும், நியாயமுமாய் உள்ளது. இல்லாது போனால் மனுதாரர் பெருத்த கஷ்ட நஷ்டமும் Legal Injury ஏற்பட்டு விடும். அதனால் 01.06.2023–ஆம் தேதியில் வாதி தரப்பில் Plaintiff side witness closed என்று உத்தரவு பிறப்பித்துள்ளதை Reopen செய்து மனுதாரர் தரப்பில் சாட்சிகளை விசாரணை செய்ய உத்தரவிட வேண்டியது அவசியமாகவும் நியாமமாகவும் உள்ளது.

3. **<u>எதிருரையில் சுருக்கம்:</u>**

மனுதாரர் மனு சட்டப்படியும், நியாயப்படியும், நிலைக்கத்தக்கதல்ல. எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடி செய்யப்படவேண்டியது.

ஷை மனுதாரர்களின் தரப்பில் விசாரணை முடிக்கப்பட்டு தற்போது எதிர் மனுதாரர்களின் தரப்பில் விசாரணைக்கு வந்த நிலையில் ஷை அசல் வழக்கை வீண்காலதாமதம் ஏற்படுத்த வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் ஷை மனுதாரர்களின் தரப்பில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அவ்வாறு மனுதாரர்கள் உரிய நேரத்தில் Further Evidence விசாரணைக்கு தகுந்த கால அவகாசம் நீதிமன்றம் கொடுக்கப்பட்டும் தொடர் விசாரணை செய்யாமலும் தற்போது இம்மனுவினை மனுதாரர்கள் தாக்கல் செய்திருக்கிறார்கள். இம்மனுவில் தங்களால் உரிய நேரத்தில் Further Evidence விசாரணை செய்ய இயலாததற்கு உண்டான உரிய காரணத்தை (Sufficient Cause) மனுதாரர்கள் நீதிமன்றத்திற்கு தெரிவிக்க வேண்டியது சட்டப்படி அவசியமாகும். ஆனால் மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்துள்ள அபிடவிட்டில் அவ்வாறு எவ்வித காரணத்தையும் மனுதாரர்கள் தெரிவித்துக்கொள்ளவில்லை. எனவே இந்த மனுவானது சட்டப்படியும், நியாயப்படியும் தள்ளுபடி செய்யப்படவேண்டிய ஒன்றாகும். ஆகவே மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஷை மனுவினை இந்த எதிர்மனுதாரர்களின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிடுமாறு எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4. **<u>பிரச்சனை:</u>**

இம்மனுவானது அனுமதிக்கப்படத்தக்கதா, இல்லையா என்பதுதான் இம்மனுவின் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனையாகும்.

**<u>தீர்வு:</u>**

5. இருதரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

6. அசல் வழக்கில் மனுதாரர்/வாதி தரப்பில் சாட்சி விசாரணைக்காக வந்து மனுதாரர்/வாதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அதன்பின்பு மனுதாரர்/வாதி தரப்பு கூடுதல் சாட்சியத்திற்காக வாய்தா ஏற்பட்டுள்ளது. கூடுதல் சாட்சியத்தை நீதிமன்றத்தில் முன்னிறுத்தாததால் மனுதாரர்/வாதி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டு எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பு சாட்சியத்திற்கு வாய்தா ஏற்பட்டுள்ளது என்பதை அறியமுடிகிறது.

இந்நிலையில் மனுதாரர்/வாதி தரப்பில் கூடுதல் சாட்சியை விசாரிப்பதற்காக அசல் வழக்கில் ரீஓபன் செய்து உத்தரவிடக்கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுவில் சொல்லப்பட்ட காரணமானது மனுதாரர் தரப்பு சாட்சியான சிங்காராயன் என்பவருக்கு கடந்த சில மாதங்களாக உடல்நிலை சரியில்லாமல் இருந்ததால், அவரை மனுதாரர் தரப்பில் சாட்சியாக ஏற்றமுடியாமல் போய்விட்டது என சொல்லப்பட்டுள்ளது.

அதேவேளையில் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் எதிருரையில் கடுமையான ஆட்சேபனை எதுவும் தாக்கல் செய்யவில்லை. மேலும் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. மனுதாரர்/வாதி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டு அடுத்த வாய்தாவிலேயே இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே மனுதாரர்/வாதிக்கு ஒரு வாய்ப்பு கொடுக்கலாம் என இந்நீதிமன்றம் கருதுகிறது.

7. மேலும், இந்த நீதிமன்றம் விசாரணை நீதிமன்றம் என்பதால் மனுதாரர்/வாதிக்கு ஒரு வாய்ப்பு அளித்து நீதியின்நலனை கருத்தில்கொண்டு இம்மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எவ்வித கஷ்ட நஷ்டமும் ஏற்படப்போவதில்லை. எனவே, இம்மனுவினை கீழ்கண்ட நிபந்தனைகளுடன் அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

**முடிவாக,**

**மனுதாரர்/வாதி வரும் 10.10.2023ம் தேதிக்குள் செலவுதொகையாக ரூ.500/–யை எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு செலுத்தும் பட்சத்தில் இந்த மனு அனுமதிக்கப்படும். தவறும்பட்சத்தில் மனு தள்ளுபடி செய்யப்படும் என்று உத்தரவிடப்படுகிறது.**

**மீண்டும் அழைக்க 10.10.2023**

இந்த உத்தரவானது என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்பு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, இன்று 2023–ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 21ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

Sd/–S.Ilayaraja,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
இராமேஸ்வரம்.

**<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சி</u> :–** **இல்லை**

**<u>மனுதாரர்கள் தரப்பு சாண்றாவணம்</u> :–** **இல்லை**

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி, சாண்றாவணம்</u> :–** **இல்லை**

Sd/–S.Ilayaraja,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
இராமேஸ்வரம்.